# வெடுக்குநாறி மலையில் கைதான 8 பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு



வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி மகா சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி பூஜை வழிபாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது ஆலயத்துக்குள் நுழைந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் வழிபாட்டில் ஈடுபட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரைக் கைது செய்தனர்.

அவர்களைக் கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் விசாரணைகள் நிறைவு பெறாத காரணத்தால் இன்று வரை அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், இன்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

காலை 9 மணி முதல் மூன்று தடவைகள் குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில், தொல்பொருள் திணைக்களத்தினர் அங்குள்ள தொல்பொருள் சின்னங்களைச் சந்தேகநபர்கள் சேதப்படுத்தினர் என்று மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர். 2➤


# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 29 செவ்வாய்க்கிழமை 12.03.2024 கதிர் 200







## அத்துமீறும் ரோலர் படகுகளை தடுத்து நிறுத்துக! யாழ் இந்தியத் துணைத் தூதரகத்திடம் மகஜரளிப்பு

### போராட்டம் வெடிக்கும் என மீனவ சங்கங்கள் எச்சரிக்கை



யாழ்ப்பாணக் கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழையும் இந்தியன் ரோலர் படகுகளை தடுத்து நிறுத்துமாறு கோரி இன்று செவ்வாய்க்கிழமை தீவகப் பகுதி தெற்கு வேணைப் பிரதேச கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் யாழ்ப்பாண இந்தியத் துணை தூதரகத்திடம் மஜகர் ஒன்றைக் கையளித்ததுடன் கண்டனப் போராட்டத்தையும் முன்னெடுத்திருந்தனர்.

இதுகுறித்து தகவல் வழங்கிய அவர்கள், தொடரும் இந்திய அத்துமீறிய ரோலர் படகுகளினால் தொடர்ச்சியாக எமது வாழ்வாதாரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்திய அத்துமீறும் ரோலர் படகுகளை 2➤

## பால்மாவின் விலைகள் இந்தவாரம் குறையும்!



இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலைகளை குறைக்கப்பட வுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பால் மாவின் விலைகள் ரூபா 100 முதல் 150 ரூபா வரை குறைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மார்ச் 15 ஆம் திகதி முதல் இந்த விலைக்குறைப்பு அமுலுக்கு வருமென அவர் குறிப்பிட்டார். (04)

## தென்னிலங்கையை உலுக்கிய வேட்டு! ஒரே இரவில் அறுவர் சுட்டுக்கொலை!!



தென்னிலங்கையில் வெவ்வேறு இடங்களில் ஒரே இரவில் 6 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

காலி மாவட்டத்தில் 4 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 2 பேரும் நேற்றிரவு இவ்வாறு சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

காலி, எல்பிட்டி - பிடிகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருவல பிரதேசத்தில் கடையொன்றுக்கு அருகில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 2 ஆண்கள் உயிரிழந்துள்ளனர்.

ஒருவர் சம்பவ இடத்திலும், 2➤

## போலி ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட மதுபான வகைகள் சந்தையில் விற்பனைக்கு வரலாம் என சந்தேகம்

### சோதனைகளை அதிகரிக்க கலால் ஆணையாளர் நாயகம் பணிப்புரை



பண்டிகை காலத்தை முன்னிட்டு போலி ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட மதுபான வகைகள் மீதான சோதனைகளை அதிகரிக்க கலால் ஆணையாளர் நாயகம் எம். ஜி. குணசிறி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கு உட்பட பல பகுதிகளில் போலி ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட மதுபான போத்தல்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகவும், இதனால், நாடளாவிய ரீதியில் சோதனைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் 2➤

## தாமரை கோபுர உணவக விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட இளைஞன், யுவதி மரணம்

கொழும்பு தாமரை கோபுர உணவகம் ஒன்றில் இடம்பெற்ற விருந்துபசாரத்தின் போது போதை வகை பானமொன்றை அருந்தியதில் திடீரென சுகவீனமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞனும் யுவதியும் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் மருதானை பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அழகு நிலையமொன்றின் முகாமையாளராக கடமையாற்றிய முல்லேரியாவை சேர்ந்த ரசாங்கிகா ருக்ஷானி என்ற 27 வயதுடைய யுவதியும், தெஹிவளையை சேர்ந்த சமிந்து திரங்க என்ற 22 வயதுடைய இளைஞருமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் நேற்று (11) தெரிவித்தார்.

இந்த போதை பானங்களை அருந்தியதன் பின்னர் சுகவீனமடைந்த இருவரும் அங்கிருந்த ஏனையவர்களால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி இருவரும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, தனது மகளின் மரணம் சந்தேகத்திற்குரியது என உயிரிழந்த யுவதியின் தாயார் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். உயிரிழந்த யுவதி ரசாங்கிகா உட்பட ஏழு பேர் குறிப்பிட்ட ஒரு போதைப்பொருளை உட்கொண்டதாக யுவதியின் காதலன் என கூறிக் கொள்ளும் இளைஞரொருவர் தெரிவித்ததாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (ரெம-31)

## தேரரைப் படுகொலை செய்த சந்தேகநபர் சுட்டுக்கொலை

கம்பஹா, மல்வத்துஹிரிபிட்டிய விகாரையில் தேரர் ஒருவரைக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட துப்பாக்கிதாரி பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார்.

அத்தனகல்ல - யட்டவத்த பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைத் தேடுவதற்காகச் சென்றிருந்தபோது சந்தேகநபர் தப்பிச் செல்ல முற்பட்டபோது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேகநபர் உயிரிழந்துள்ளார்.

கம்பஹா, மல்வத்துஹிரிபிட்டிய கஹடான ஸ்ரீ கனாராம விகாரையைச் சேர்ந்த தேரர் ஒருவர், கடந்த ஜனவரி 23ஆம் திகதி சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் துப்பாக்கிதாரி எனச் சந்தேகிக்கப்படும் மேற்படி நபர், மொனராகலை - ஹம்பேகமுவ பகுதியில் கைது செய்யப்பட்டிருந்தார். 2➤

# இளம் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

மனைவியுடன் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவரைக் கும்பல் ஒன்று கடத்திச் சென்று வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொண்டநிலையில் அந்தக் குடும்பஸ்தர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை - மாவடி பகுதியைச் சேர்ந்த தவச்செல்வம் பவித்திரன் (வயது 23) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மேற்படி குடும்பஸ்தரும் அவரது மனைவியும் காரைநகரில் இருந்து வட்டுக்கோட்டை - மாவடியில் உள்ள வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை பொன்னாலை கடற்படை முகாமுக்கு அருகாமையில் இரண்டு கார்களில் ஆயுதங்களுடன் நின்ற சிலர் அவர்களை வழிமறித்தனர்.

ஒரு காரில் மனைவியையும் அடுத்த காரில் மேற்படி நபரையும் ஏற்றிக்கொண்டு அந்தக் குழு அங்கிருந்து சென்றது. பின்னர் மனைவியைச் சித்தங்கேணி சந்தியில் இறக்கி விட்டனர்.

அதன்பின்னர் மனைவி வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்வதற்குச் சென்றார். இந்நிலையில், அந்த நபரைக் கடத்திச் சென்றவர்கள் அவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொண்ட பின்னர் வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் உள்ள மாமரத்துக்குக் கீழே அவரைத் தூக்கி வீசிவிட்டுச் சென்றனர் .

வைத்தியசாலையில் இருந்த சுகாதாரப் பணியாளர்கள் இது தொடர்பில் வைத்தியருக்குத் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தினர். அவ்விடத்துக்கு வந்த வைத்தியர் அம்புலன்ஸ் மூலம் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை சில நிமிடங்களில் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொலையாளிகளைக் கைது செய்ய விசேட பொலிஸ் குழு விசாரணைகளை நடத்தி வருகின்றது.

முன்னதாக மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலுக்குப் பழிவாங்கும் நோக்கில் மேற்படி வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் தட்டுப்பாடு



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் ஓ இரத்த வகைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் அந்த வகை இரத்தம் உள்ள குருதிக் கொடையாளர்கள் யாழ்.இரத்த வங்கிக்கு நேரில் வருகை தந்து குருதிக் கொடை வழங்குமாறு இரத்த வங்கியினர் அறிவித்துள்ளனர்.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் இரத்த தான முகாம்களை நடாத்த விரும்புவோரை அதற்கான முயற்சிகளை முன்னெடுக்குமாறும், மேலதிக விபரங்களை தெரிந்து கொள்வதற்கு 0772105375 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். (O1)

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு விண்ணப்பம்




2023 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுக்காக விண்ணப்பிக்கும் நபர்களின் விண்ணப்பங்கள் தற்போது ஏற்கப்பட்டு வருகின்றன.

இதற்காக இம்மாதம் 22 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி www.onlineexams.gov.lk/eic என்ற இணையதளத்தின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## அத்துமீறும் ரோலர...

தடுத்து நிறுத்துமாறு இலங்கை மற்றும் இந்திய அரச உயர் மட்டம் வரை மஜகர்களைக் கையளித்தது மட்டுமல்லாது கண்டனப் போராட்டங்களையும் மேற்கொண்டோம்.

ஆனால், எமது கோரிக்கை தொடர்பில் இந்திய அரச உயர் மட்டம் இதுவரை சாதகமான பதில் எதுவும் வழங்கவில்லை.

ஆகவே, எமது கோரிக்கை அடங்கிய மஜகருக்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகத்திடம் மேலுமொரு மகஜரை வழங்கியுள்ளோம்.

எமது மஜகருக்கான பதிலை இம்மாதம் 25 ஆம் திதிக்கு முன்னர் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ள நிலையில், அதனை வழங்காத சந்தர்ப்பத்தில் 25ஆம் திகதிக்கு ப்பின்னர் மாபெரும் போராட்டம் ஒன்றை மேற்கொள்வதற்காகத் திட்டமிட்டுள்ளோம், என தெரிவித்தனர்.

இன்று அவர்கள் முன்னெடுத்த கண்டனப் போராட்டத்தில், அடிக்காதே அடிக்காதே மீனவர் வயிற்றில் அடிக்காதே!, இந்திய அரசே தமிழக ரோலரை தடுத்து நிறுத்து!, தொப்புள் கொடி உறவே - நமது கடல் வளத்தை அழிக்காதே!, போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகள் ஏந்தப்பட்டிருந்தன.

குறித்த போராட்டத்தில் தீவகம் தெற்கு கூட்டுறவு சமாசங்களின் தலைவர் ஆறுமுகம் கனகசபை, யாழ் மாவட்ட கிராமிய கடற்தொழிலாளர் கிராமிய கூட்டுறவு சங்கங்களின் தலைவர் செல்லத்துரை நற்குணம், யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் ஸ்ரீ கந்தவேல் புனித பிரகாஷ் மற்றும் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் உப தலைவர் அந்தோணிப் பிள்ளை பிரான்சிஸ் ரட்னகுமார் உட்பட பல மீனவப் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். (O1)

## வெடுக்குநாறிமலையில் ......

இதனையடுத்து மேற்படி சந்தேகநபர்கள் 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேர் சார்பில் ஜனாபதிதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகளான என்.ஸ்ரீகாந்தா, க.சுகாஷ், தி.திருஅருள், கிறிஸ்ரினா, ஜிதர்சன், சஜித்தா, சாருகேசி, விதுசினி, கீர்த்தனன், யூஜின் ஆனந்தராஜா, கொன்சியஸ் உள்ளிட்ட பலர் மன்றில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## போலி ஸ்டிக்கர் ....

தெரிவித்துள்ளார். அதன்படி, வாரம் தோறும் போலி ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட மது போத்தல்கள் மற்றும் சட்டவிரோத உற்பத்தி பொருட்கள் குறித்து அதிகாரிகள் சோதனைகளை நடத்தி வருகின்றனர்.

இவற்றை கண்காணிக்க கலால் உதவி ஆணையர்கள் நியமிக்கப்பட்டு, சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் கலால் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம32)

## தேரரைப் படுகொலை.....

அரலகங்வில பகுதியைச் சேர்ந்த 32 வயதான சந்தேகநபர் அந்தப் பகுதியில் இருக்கின்றார் என்று ஹம்பேகமுவ பொலிஸ் நிலையத்தின் புலனாய்வு அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய அவர் கைது செய்யப்பட்டிருந்தார். (அ)

மற்றைய நபர் வைத்தியசாலையிலும் சாவடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தத் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தப் படுகொலைக்கு ரி - 56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, காலி, அம்பலாங்கொடை - கலகொட பிரதேசத்தில் கடையொன்று மீது நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 2 ஆண்கள் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தத் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இந்தப் படுகொலைக்கும் ரி - 56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த மூவர் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கம்பஹா, பியகம பிரதேசத்தில் நேற்றிரவு 28 வயதுடைய இளைஞன் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த மேற்படி நபர், வீட்டுக்கு அருகில் வைத்து கைத்துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஓட்டோவில் வந்த இருவரே இந்தத் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, கம்பஹா, ஜா - எல பிரதேசத்தில் நேற்றிரவு 41 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். மேற்படி நபர், வீட்டில் வைத்து கைத்துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தத் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

தென்னிலங்கையை உலுக்கிய இந்தப் படுகொலைச் சம்பவங்கள் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# நிப்பொன் பெயிண்ட் கிளிஃபோர்ட் ரக்பி பொலிஸ் ஸ்போர்ட் கிளப் சம்பியனானது!

2024 ஆம் ஆண்டு நிப்பொன் பெயிண்ட் கிளிஃபோர்ட் ரக்பி கிண்ணத் தொடரில் பொலிஸ் ஸ்போர்ட் கிளப் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

பரபரப்பான இறுதிப் போட்டியில் ரன்னர்ஸ்-அப் பட்டத்தை வென்ற ஹவ்லொக் ஸ்போர்ட்ஸ் கிளப் அணி, பொலிஸ் ஸ்போர்ட் கிளப்புக்கு எதிராக துணிச்சலாக போராடியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த அணிகளின் அர்ப்பணிப்பு மற்றும் திறமைக்கும், ரக்பியின் அற்புதமான உணர்வை வெளிப்படுத்தியமைக்கும் நிப்பொன் பெயிண்ட் தனது வாழ்த்துகளைத் தெரிவித்திருக்கிறது.









## மின்சார விநியோகத் திட்ட ஊழியர்களுக்கு குறுக்கு வழியில் போனஸ் வழங்கப்பட்டதா?

மின்சார விநியோகத்தின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கான உதவி திட்டத்தின் நிதியைப் பயன்படுத்தி குறித்த திட்ட அலுவலக ஊழியர்களுக்கு 24.5 மில்லியன் ரூபா போனஸாக வழங்கப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, சுற்றறிக்கைகளுக்கு மாறாக 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரை இந்த போனஸ் தொகை செலுத்தப்பட்டுள்ளது என கணக்காய்வின் மூலம் தெரியவந்துள்ளது. வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களுக்கு தொடர்புடைய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை கடைபிடிக்க வேண்டியது கட்டாயம் என கணக்காய்வில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் கொள்கை மற்றும் அனைத்து இலங்கை மின்சார சபை ஊழியர்கள் தொடர்பான வழிகாட்டல்களுக்கு அமைவாகவே இந்த போனஸ் வழங்கல் நடந்துள்ளதாக இத்திட்டத்தின் நிர்வாகம் கணக்காய்வு அலுவலகத்திற்கு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-30)

## கர்ப்பப்பை வாய் புற்றுநோய் வேகமெடுப்பு அலட்சியப்படுத்தினால் மரணமதிகரிக்கலாம்!

*அண்மைய ஆய்வொன்றில் தெரியவந்தது*

கர்ப்பப்பை வாய் புற்றுநோய் இலங்கையில் மிக வேகமாக பீடித்து வரும் புற்றுநோயாக இருப்பதாக ஒரு கணக்கெடுப்பொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

வருடமொன்றிற்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோயினால் 1407 பேர் பாதிக்கப்படுவதாகவும், இதில் சுமார் 780 பேர் மரணமடைவதாகவும் இந்த கணக்கெடுப்பில் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், குறித்த கர்ப்பப்பை வாய் புற்றுநோயை அலட்சியப்படுத்தினால், 2070 ஆம் ஆண்டின் போது இலங்கையில் 58,754 இறப்புகளும், 2120 ஆம் ஆண்டின் போது 115,137 இறப்புகளும் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படும் என கணிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைக் கண்டறிந்து அதனை கட்டுப்படுத்தும் முதலாவது முன்னோடி ஆய்வுத் திட்டமொன்று களுத்துறை மாவட்டத்தை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரெம-33)

# மட்டக்களப்பு தாந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கி கையளிக்கப்பட்டது



*மட்டக்களப்பு தாந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலய வளாகத்தில், நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கி ஆலய*

*பரிபாலன சபையினரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.*

*முனைதீவைச் சேர்ந்த அமரர் வைரமுத்து நடராசாவின் நினைவாக, ஐக்கிய அமெரிக்க நடராசா அறக்கட்டளையினால் 5 மில்லியன் ரூபா செலவில் நீர்த்தாங்கி நிர்மாணிக்கப்பட்டது.*

*தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய பிரதம குரு பு.நவருபன் குருக்கள் தலைமையில்நடைபெற்ற, பூசை வழிபாட்டை தொடர்ந்து, அமரர் வைரமுத்து நடராசா குடும்பத்தினரினால் ந ீ ர் த் தா ங் கி கையளிக்கப்பட்டது.*

*நீர்த்தாங்கிகையளிக்கும் நிகழ்வில் தமிழ் நாடு சந்த் மகாசபாவின், தலைவர் ஸ்ரீ ஸ்ரீராம் சுவாமி, ஆலோசனை குழு தலைவர் ஸ்ரீ சிவசங்கர் திருப்பாதி, ஆலோசனை குழு செயலாளர் செல்வி ஆர்த்தி திருப்பாதி, துணைத்தலைவர் ஸ்ரீ எம் சசிகுமார், தமிழ் நாடு சந்த் மகாசபாவின் செயலாளரகளான ஸ்ரீ பா.சாய்குமார், ஸ்ரீ பெ.ஐவகர் ரெட்டி மற்றும் கர்நாடகா மாநிலம் சந்த் மகாசபா தலைவர் ஸ்ரீ ஆர்.ஸ்ரீநிவாசன்,*

*தாந்தா மலை ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபை தலைவர் எம் அருணன், செயலாளர் எஸ் பரா,*

*பரிபாலனசபை உறுப்பினர்கள், அமரர் வைரமுத்து நடராசா குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.*

*நீர்த்தாங்கியை நிர்மாணித்துக்கொடுத்தமைக்காக, அமரர் வைரமுத்து நடராசா குடும்பத்தினருக்கு, தாந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலயம் கௌரமளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.*



# அருணாசலப் பிரதேசத்துக்கு மோடி பயணம் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ள சீனா

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த வாரம் அருணாசலப் பிரதேசத்துக்கு பயணம் மேற்கொண்டதற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அருணாசல பிரதேசத்தை தெற்கு திபெத் என்று கூறி வரும் சீனா, அது தங்கள் நாட்டின் ஒரு பகுதி என்று உரிமை கொண்டாடி வருகிறது. ஷாங்னான் என்றும் அந்த பிராந்தியத்தை சீனா அழைத்து வருகிறது. இந்தியாவைச் சேர்ந்த தலைவர்கள் அருணாசல பிரதேசத்துக்கு பயணம் மேற்கொண்டால், அதற்கு எதிர்ப்பும் தெரிவித்து வருகிறது.

அதே நேரத்தில் சீனாவின் இந்தக் கருத்தை முற்றிலும் நிராகரித்து வரும் இந்தியா, அருணாசல பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்பதில் உறுதியாக உள்ளது.

அருணாசல பிரதேசம், மணிப்பூர், மேகாலயம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் ரூ.55,600 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களின் தொடக்கம் - அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி, அருணாசல பிரதேச மாநிலம், இடாநகரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்ற இந்தியப் பிரதமர் மோடி, அருணாசல பிரதேசத்தில் 13,000 அடி உயரத்தில் இமய மலையைக் குடைந்து கட்டப்பட்ட 'சேலா' சுரங்கப் பாதையையும் திறந்துவைத்தார்.

இந்நிலையில் பீஜிங்கில் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின்னிடம், இந்தியப் பிரதமர் மோடியின் அருணாசல பிரதேச பயணம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு, 'ஷாங்னான் சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி. இந்தியா அதனை அருணாசல பிரதேசம் என்று அழைத்து வருவதை சீனா ஏற்கவில்லை. இந்தியாவின் இந்த சட்டவிரோத செயலுக்கு சீனா தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்தியப் பிரதமர் மோடி சீனப் பிராந்தியத்துக்குள் உரிய அனுமதியின்றிப் பயணிப்பதை ஏற்க முடியாது. இந்தியா-சீனா எல்லைப் பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. சீன பிராந்தியமான ஷாங்னானில் இந்தியா தன்னிச்சையாக வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதை ஏற்க முடியாது. இந்தியாவின் இதுபோன்ற செயல்பாடுகள் எல்லைப் பிரச்னையை மேலும் சிக்கலாக்கும், என்றார்.



அருணாசல பிரதேசத்தில் இந்தியா கட்டியுள்ள சுரங்கப் பாதை மூலம் சீன எல்லைக்கு வீரர்களையும், ராணுவத் தளவாடங்களையும் அந்த நாடு விரைந்து அனுப்பி வைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# அல்-கொய்தா அமைப்பினரின் யேமன் பிரிவு தலைவர் மரணம்



அல்-கொய்தா அமைப்பின் யேமன் பிரிவு தலைவர் காலித் அல்-பட்டார்ஃபி இறந்துவிட்டதாக அந்த அமைப்பு அறிவித்துள்ளது. எனினும், அவரது உயிரிழப்புக்கான காரணம் மர்மமாக உள்ளது.

பின் லேடன் கொல்லப்பட்டதற்குப் பிறகு அல்-கொய்தா அமைப்பு பலம் இழந்துவிட்டதாகக் கூறப்பட்டாலும், அதன் யேமன் பிரிவு இன்னும் அபாயமானதாகக் கருதப்படுகிறது. அதன் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவந்த நிலையில் அதன் தலைமைப் பதவிகளில் இருக்கும் நபர்களுக்குப் பல நாடுகளும் குறிவைத்து வருகின்றன.

காலித் அல்-பட்டார்ஃபி குறித்து தகவல்கள் அளிப்பவர்களுக்கு 50 லட்சம் டொலர் சன்மானம் வழங்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்திருந்தது. இந்த நிலையில் அவர் உயிரிழந்துவிட்டதாக திடீரென அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

# சுவீடனின் தேசியக் கொடி பிரஸ்ஸெல்ஸில் ஏறியது!



நேட்டோ அமைப்பில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள சுவீடனின் தேசியக் கொடி, பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸெல்ஸில் உள்ள அந்த ராணுவக் கூட்டமைப்பின் தலைமையகத்தில் முதல்முறையாக ஏற்றப்பட்டது.

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 2022 இல் படையெடுத்ததற்குப் பிறகு, நேட்டோவில் அங்கம் வகிக்காத பிற ஐரோப்பிய நாடுகளையும் அந்த நாடு ஆக்கிரமிக்கலாம் என்று அச்சம் எழுந்தது.

அதையடுத்து, நேட்டோவில் இணைவதற்கு பின்லாந்தும், சுவீடனும் விண்ணப்பித்தன. இதில் பின்லாந்துக்கு நேட்டோ உறுப்பினர் அந்தஸ்து உடனடியாகக் கிடைத்தது. துருக்கி ஏற்படுத்தி வந்த தடையால் அந்த அமைப்பில் சுவீடன் இணைக்கப்படுவது தாமதமாகிவந்தது.

தற்போது சுவீடனும் நேட்டோ அமைப்பில் இணைக்கப்பட்டுள்ளதால் அந்த நாட்டின் கொடியும் பிரஸ்ஸெல்ஸில் ஏற்றப்பட்டுள்ளது. (04)

# பாகிஸ்தானின் முதன்மைப் பெண்மணியாக பெநசீர் புட்டோவின் மகள் அறிவிக்கப்படுவார்!

*பாகிஸ்தானின் அதிபராக ஞாயிற்றுக்கிழமை பொறுப்பேற்றுக்கொண்ட ஆசிப் அலி ஸர்தாரியின் மகள் அசீபா புட்டோ, நாட்டின் முதன்மைப் பெண்மணியாக அறிவிக்கப்படவிருக்கிறார்.*

*முன்னாள் பிரதமரும், ஸர்தாரியின் மனைவியுமான பெநசீர் புட்டோ, கடந்த 2007 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தின்போது படுகொலை செய்யப்பட்டார். அதன் பிறகு ஸர்தாரி மறுமணம் செய்துகொள்ளவில்லை.*

*இந்த நிலையில், அதிபராகப் பொறுப்பேற்றதன் மூலம் ஸர்தாரி நாட்டின் முதல் குடிமகன் ஆனார்.*

*எனினும், முதன்மைப் பெண்மணியாக அறிவிக்கப்பட அவருக்கு மனைவி இல்லாததால் மகள் அசீபாவுக்கு அந்த அந்தஸ்தை ஸர்தாரி வழங்குவார் என்று கூறப்படுகிறது. (04)*



# இறக்காமம் பிரதேச மட்ட இளைஞர் கழக விளையாட்டு விழாவும் பரிசளிப்பும்

(எம்.எம்.ஜெஸ்மின்)

இறக்காமம்பிரதேசஇளைஞர்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் எஸ்.எம். றிஜாஸ் தலைமையில் நேற்று இறக்காமம் குளக்கரை மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் அஷ்ஷேய்க் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் (நளீமி) கலந்து சிறப்பித்தார்.

விசேட அதிதியாக அம்பாறை மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் திருமதி கங்கா சாகரிக்கா தமந்தி மற்றும் மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி ஆர்.எம். சிறிவர்டன ஆகியோரும், கௌரவ அதிதிகளாக உதவி பொறியியலாளர் ஏ.எல். சியாட் (நிலைய பொறுப்பதிகாரி நீர்வழங்கள் வடிகாலமைப்பு காரியாலயம்-தமனை), முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் என்.எம். ஆசிக், உளவளத்துணை ஆலோசகர் ஏ.எச்.றகீப் ஆகியோரும் இணைந்துகொண்டனர்.

அமீரலிபுர சனசமூக நிலையத்தின் தலைவர் எஸ்.எம். பாஹிர், தொழிலதிபர் எஸ்.எல். றஸீன் உட்பட இந்நிகழ்வினை வெற்றிகரமாக நிறைவு செய்ய பல்வேறு வகையிலும் அனுசரணை வழங்கிய தொழிலதிபர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.




இளைஞர் சேவைகள் அதிகாரி ஏ.ஆர்.றியாஸின் ஒருங்கிணைப்பு மற்றும் வழிகாட்டுதலில் இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றன.

# அக்கரைப்பற்று வோர்க்கஸ் யூனியனின் வருடாந்த விளையாட்டுப் போட்டி



(எம் எப்.நவாஸ்)

அக்கரைப்பற்று வோர்க்கஸ் யூனியனின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் அண்மையில் அக்கரைப்பற்று நீர் பூங்காவில் இடம் பெற்றன.

இதன்போது 2000 மீற்றர்நடைபோட்டியில் எம்.எப்.எம்.நசில் ஆசிரியர் முதலிடம் பெற்று அதற்கான வெற்றிக்கிண்ணத்தை அக்கரைப்பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிஎப்எம்ஏ. காதர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இவர், 2022ஆம் ஆண்டில் இதே போட்டியில்இரண்டாம் இடத்தையும் 2023ம் ஆம் ஆண்டு முதலிடத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத் தக்கது.

# கலாசாலையில் தமிழக உளவியலாளர் முனைவர் சரண்யா ஜெய்குமாரின் உரை



இந்தியத் துணைத்தூதரகத்தின் ஆதரவுடன் தமிழகத்தின் பிரபல செயலூக்கப் பேச்சாளர் முனைவர் சரண்யா ஜெய்குமார் பங்கேற்ற செயலூக்க உரை நேற்று மாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில்இடம்பெற்ற இந்நிகழ்வில்தொடக்கவுரையை இலங்கை கல்வி அபிவிருத்தி குழுமத்தின் இணைப்பாளர் லண்டனைச் சேர்ந்த பொறியியலாளர் இணுவிலூர் நடராசா சச்சிதானந்தம் ஆற்றினார். நிறைவுரையை லண்டன் பல்கலைக்கழக பேராசிரியர் சிவாப்பிள்ளை ஆற்றினார்.

நிகழ்வில் தற்கால மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் கைக்கொள்ளக்கூடிய உத்திகள் என்ற பொருளில் முனைவர் சரண்யா ஜெய்குமார் உரையாற்றினார்.




# கல்முனையன்ஸ் போரத்தினால் ஸஹர் உணவு விநியோகம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனையில் உள்ள அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் நோயாளிகளுடன் தங்கியுள்ளவர்களுக்கும், கல்முனையில் தங்கியுள்ள வெளியூர் பயணிகளுக்கும் புனித நோன்பை நோற்க ஸஹர் உணவு இலவசமாக வழங்க கல்முனையன்ஸ் போரம் ஏற்பாடு செய்துள்ளது.

ஸஹர்உணவுதேவைப்படுபவர்கள் 0777849423, 0767969913 ஆகிய தொலைபேசி இலக்கங்களை மாலை 5 மணி முதல் 7 மணிக்குள் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளுமாறும் ஸஹர் நேரத்தில் நேரில் வந்து ஸஹர் உணவு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் நோயாளிகளுடன் தங்கியுள்ளவர்களும், பல்வேறு தேவைகளுக்காக வெளியூர்களிலிருந்து கல்முனைக்கு வருகை தருபவர்களும் ரமழான் மாதத்தில் ஸஹர் உணவை பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல் நிலையை கருத்திற்கொண்டு கல்முனையன்ஸ் போரம் தொடர்ந்து ஆறாவது ஆண்டாக இவ்வேலைத்திட்டத்தினை முன்னெடுத்து வருகிறது என கல்முனையன்ஸ் போரம் நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.

# நாடு பூராவும் 40,000 போலி மருத்துவர்கள்! சட்டத் திருத்தங்கள் கொணர ஆலோசனை

நாடுபூராவும்உள்ள40,000க்கும்மேற்பட்ட போலிமருத்துவர்கள் குறித்து சுற்றிவளைப்பு தேடுதல்கள் நடைபெற்று வருகின்ற அதேவேளை, அவர்களுக்கு எதிராக அபராதம் விதித்தல் மற்றும் சிறைத்தண்டனை விதிப்பதற்கான புதிய சட்டத் திருத்தங்களை அவசரமாக கொண்டு வர 12 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

மருத்துவ சபையின் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழைப் பெறாமல் மருத்துவம் செய்கின்ற போலி மருத்துவர்கள், பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களிடம் குறைந்த மருத்துவ கட்டணத்தை அறவிடுவதன் மூலம் அவர்களை தம்மிடம் வரச்செய்து தவறான மருந்துச் சீட்டுகளை எழுதிக் கொடுப்பதும் தெரியவந்துள்ளது. புதிய சட்டங்களை தயாரிப்பது தொடர்பில் அரச வைத்தியர்கள் சங்கம் நீதி அமைச்சுடன் ஏற்கனவே பல சுற்று கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளதாகவும், வைத்தியர்களின் மருந்துச் சீட்டு இன்றி மருந்துகளை வழங்குகின்ற மருந்தகங்களுக்கு எதிரான சட்டங்கள் கடுமையாக்கப்படும் எனவும் மருத்துவர் சமில் விஜேசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-27)

## மகனின் மருத்துவ சான்றிதழை காட்டி மருத்துவம் செய்த போலி மருத்துவர்



பியகம, பண்டாரவத்தை பிரதேசத்திலுள்ள தனியார் மருத்துவ நிலையத்தில் வைத்தியர் போல் நடித்து நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்த 66 வயதுடைய போலி மருத்துவர் ஒருவரை பியகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த மருத்துவ நிலையத்தில், நோயாளிகளைப்பரிசோதிப்பதற்கான மருத்துவக் குழாய், இரத்த அழுத்தத்தை அளவிடும் கருவி, நோயாளிகளுக்காக வழங்கப்பட்ட மருந்து பரிந்துரை குறிப்புகள் மற்றும் ரப்பர் ஸ்டேம்ப் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றினர். இந்த சந்தேக நபரின் மகன் ஒரு மருத்துவர் ஆவார். அந்த மகன் தற்போது வெளிநாடொன்றில் வசித்து வருகின்றார். அவரது மருத்துவ சான்றிதழை பயன்படுத்தியே குறித்த சந்தேக நபர் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்துள்ளார் என கூறப்படுகின்றது.

விசேட பொலிஸ் பணியகத்தின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், பத்து மாதங்களுக்கும் மேலாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு இந்த போலி மருத்துவர் சிகிச்சை அளித்து வந்தமை பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட நபர் நீர்கொழும்பு பிரதேசத்தை சேர்ந்தவர்என்பதுடன்அவரை மஹர நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (ரெம-28)

## பூரண மாற்றுத் திறனாளிகளுக்கு வாக்களிக்க அடையாள அட்டை

### மொனராகலை உதவித் தேர்தல்கள் அலுவலகம் ஏற்பாடு

மொனராகலையிலுள்ள பூரண மாற்றுத் திறனாளி நபர்களுக்கு வாக்களிக்கப் பயன்படும் தற்காலிக அடையாள அட்டையையொன்றை வழங்குவதற்கு மொனராகலை உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம் ஏற்பாடுகளை செய்துள்ளது.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான தேசிய இயக்கம் இதற்கு அனுசரணை வழங்க முன் வந்துள்ளதுடன், இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்டத்திலுள்ள 500 பூரண மாற்றுத் திறனாளி வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பாக புத்தள பிரதேச செயலகப் பகுதியிலுள்ள மாற்றுத்திறனாளிகளை அடையாளம் காணும் நிகழ்வு புத்தள பிரதேச செயலக கேட்போர் கூடத்தில்இடம்பெற்றது. இந்நிகழ்வில்மொனராகலை உதவி தேர்தல் ஆணையாளர் நாகலிங்கம் ரீகனும் கலந்து கொண்டார். மாற்றுத்திறனாளிகளுக்கு வாக்களிப்பதற்கான வசதிக்காக வழங்கப்படும் இந்த அடையாள அட்டை, வாக்களிப்பதற்கு மட்டுமே செல்லுபடியாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரெம-29)






## தென்கிழக்கு பல்கலை உபவேந்தர் பதவிக்காக ஏழு பேர் விண்ணப்பம்





(எம்.எம்.றம்ஸீன்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்களது முதலாவது மூன்றாண்டு பதவிக்காலம் எதிர்வரும் 2024.08.08 ஆம் திகதியுடன் நிறைவடைகின்ற அதேவேளை குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்துக்கமைய பல்கலைக்கழக பேரவையின் சார்பில் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் அவர்கள் விண்ணப்பங்களுக்கான அழைப்பை கடந்த 2024.02.08 ஆம் திகதி விடுத்திருந்தார்.

அதன் அடிப்படையில் தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, பேராசிரியர் எஸ்.எம். ஜ/னைடீன், பேராசிரியர் எம்.வி.எம். இஸ்மாயில், பேராசிரியர் ஏ.எம். முஸாதிக் மற்றும் கலாநிதி ஏ.சி.எம். ஹனஸ் உள்ளிட்ட ஏழு பேர் விண்ணப்பித்துள்ளனர்.

புதிய உபவேந்தர், பல்ளூ கலைக்கழக பேரவையின் விஷேட ஒன்றுகூடல் ஒன்றின் ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03ஃ2023 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளதன் அடிப்படைளூ யில் பேரவை உறுப்பினர்கள், விண்ணப்பதாரிகளுக்கு ஏழு அளவுகோல்களின் கீழ் புள்ளிகள் இட்டு, பெற்ற அதிகூடிய புள்ளிகள் அடிப்படையில் மூவரை தெரிவு செய்வர். குறித்த மூவரில் ஒருவரை ஜனாதிபதி உபவேந்தராக நியமிப்பார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு இம்முறை தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசார், சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளமை விசேட அம்சமாகும்.

கடந்த 2021.08. 08 ஆம் திகதியன்று பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் 5 ஆவது உபவேந்தராக நியமிக்கப்பட்டிருந்தார். தற்போது விண்ணப்பித்துள்ள ஏழு விண்ணப்பதாரிகளில் ஒருவர் ஆறாவது உபவேந்தராக நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.03.2024 இல் வெளியிடப்பெற்றது.